**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2057, திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் 18–ம் தேதி**

**2026–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03–ம் நாள் திங்கட்கிழமை**

**IA No.11/2026**

**in**

**OS no.84/2019**

**---**

1. பொன்னுச்சாமி
2. செல்லம்மாள் ....மனுதார்கள்/ வாதிகள்

**/எதிர்/**

1. ஆண்டி அம்பலம்(இறப்பு)
2. இந்திரா
3. ஜெ.டி.எம்.ஜெயஹக்கர் .....எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்
4. வீராயி அம்மாள்
5. ஊர்காவலன்
6. காளிமுத்து
7. முத்து ..... Proposed 4 to 7 எதிர்மனுதார்கள்/ Proposed 4 to 7 பிரதிவாதி/LR's of D1

இம்மனு என் முன்பாக 31.07.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

கடந்த 06.11.2020ம் தேதி இறந்துபோன 1ம் பிரதிவாதி ஆண்டி அம்பலம் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளான Proposed 4 முதல் 7 வரை எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் 4 முதல் 7 வரை பிரதிவாதிகளாக சேர்த்துக்கொள்ள மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2033 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:07:10 +0530

**2) மனுதாரர்/ வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

தாவா வழக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாக்கு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 28.07.2022ம் தேதி தனக்கு எதிராக வழக்கும் Dismiss for Default ஆன நிலையில், மேற்படி வழக்கை தனது தரப்பில் மீண்டும் கோப்பிற்கு எடுப்பதற்காக மேற்படி எதிர்மனுதார்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டதில், மேற்படி 1, 2 எதிர்மனுதார்கள் சமூகம் நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையில்லா தரப்பினர் என்று Ex–parte செய்யப்பட்டதில், 3ம் எதிர்மனுதாரர் மட்டும் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்கு எதிராக எதிர்வாதம் செய்தார் என்றும், இந்நிலையில் கடந்த 03.07.2025ம் தேதியன்று மேற்படி ஐ.ஏ. 1/2020 மனுக்கள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டு, அசல் வழக்கும் மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, சமூகம் நீதிமன்றத்தில் இருந்து எதிர்மனுதார்களுக்கு அழைப்பாணை சென்ற போது தான் மேற்படி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி ஆண்டி அம்பலம் என்பவரும் கடந்த 06.11.2020ம் தேதி இயற்கை எய்திவிட்டார் என்ற விபரமும் தெரியவந்தது என்றும், ஆண்டி அம்பலத்தின் வாரிசான அவரது மகள் இந்திரா என்பவர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக இருந்துவருவதாலும், ஆண்டி அம்பலத்தின் இதர வாரிசுகளான Proposed 4 முதல் 7 வரை எதிர்மனுதார்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், மேற்படியார்களைத் தவிர ஆண்டி அம்பலத்திற்கு வேறு ஆண், பெண் வாரிசுகள் இல்லை என்றும், மேற்கண்ட காரணத்தினால் குறிப்பிட்ட காலத்தினுள் மனுத்தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது என்றும், எனவே Proposed 4 முதல் 7 வரை எதிர்மனுதாரர்களை 4 முதல் 7 வரை பிரதிவாதிகளாக சேர்த்திட வாரிசு மனுத்தாக்கல் செய்வதில், 2033 நாட்கள் காலதாமதமும் ஏற்பட்டுவிட்டது என்றும், மேற்படி தவறுகையும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் என்றும், எனவே வாரிசு மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2033 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டியதும் அவசியமாக உள்ளது என்றும், அவ்விதம் இல்லாது போனால் தனக்கும் ஈடு செய்ய இயலாத கஷ்டம் நஷ்டம் சம்பவித்து விடும் என்றும், ஆகையால் கடந்த 06.11.2020ம் தேதி இறந்துபோன 1ம் பிரதிவாதி ஆண்டி அம்பலம் என்பவரின் சட்டப்படியான வாரிசுகளான Proposed 4 முதல் 7 எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்துக்கொள்ள மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2033 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இந்த

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:07:15 +0530

மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்:-</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவில் இந்நிர் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியால் நேரடியாக ஒத்துக் கொள்ளக்கூடிய சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் யாவும் முற்றிலும் பொய்யானவை என்றும், உண்மைக்கு புறம்பான சங்கதிகள் என்றும், மேற்படி சங்கதிகள் யாவும் அற்பமான சங்கதிகள் என்றும் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியால் தெரிவிக்கப்படுகிறது என்றும், மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்ததக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மனுதாரர்கள்/வாதிகளையே சாரும் என்றும், மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டு பாரா 2ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும், மேலும் மனுதார்கள்/ வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவில் 1ம் மனுதாரர்/வாதியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் உறவினர்கள் ஆவார்கள் என்றும், மேலும் மனுதார்கள்/வாதிகளும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் மேலராங்கியம் கிராமத்தில் ஒன்றாக விசித்து வருகின்றார்கள் என்றும், மேலும் கடந்த 06.11.2020ம் தேதியன்று 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியான ஆண்டி அம்பலம் என்பவர் இறந்த விபரம் உடனடியாக மனுதாரர்கள்/வாதிகளுக்கு தெரியும் என்றும், மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியான ஆண்டி அம்பலத்தின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள் ஆவார்கள் என்றும், மனுதாரர்கள்/வாதிகளுக்கும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியான ஆண்டி அம்பலம் கடந்த 06.11.2020ம் தேதியன்று இறந்த விசயம் அன்றயைதினமே மனுதாரர்கள்/வாதிகளுக்கு தெரியும் என்றும், வேண்டுமென்றே அதனை மனுவில் மறைத்துள்ளார்கள் என்றும், மேலும் மனுதாரர்கள்/ வாதிகளும் 2ம் எதிர்மனுதாரர் இந்திராவும் கூட்டுச் சேர்ந்து இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலும், மனுதாரர்கள்/வாதிகளுக்கு, 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்துபோன விபரம் உடனே தெரிந்திருந்தும், வழக்கை காலதாமதப்படுத்த, வேண்டும் என்ற நோக்கத்தோடு சுமார் 51/2 ஆண்டுகள் மொத்தம் 2033 நாட்கள் கழித்து காலதாமதமாக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும், 2033 நாட்கள் காலதாமதமானது மனுதாரர்கள்/வாதிகளால் வேண்டுமென்றே

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:07:20 +0530

ஏற்படுத்தப்பட்டதாகும் என்றும், மேலும், மனுதாரர்கள்/வாதிகள் காலதாமதத்திற்கான மனுவில் கூறியுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றும், மேலும், தேவைப்படும் பட்சத்தில் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி கூடுதல் எதிருரை தாக்கல் செய்யும் உரிமையை இதன்மூலம் தக்க வைத்துக் கொள்கிறார் என்றும், எனவே மாண்புமிகு நீதிமன்றம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக் கொண்டு, மனுதாரர்கள்/ வாதிகள் தாக்கல் செய்துள்ள மேற்படி 2033 நாட்கள் காலதாமதத்தினை மன்னிக்கக் கோரி தாக்கல் செய்துள்ள இடைநிலை மனுவினை எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

5) இருபுறமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். தாவா வழக்கு நிரந்தர உறுததுக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 28.07.2022ம் தேதி தாவா வழக்கும் Dismissed for default ஆன நிலையில் மேற்படி வழக்கை மனுதாரர் தரப்பில் மீண்டும் கோப்பிற்கு எடுப்பதற்காக மேற்படி மனுதாரருக்கு ரோட்டீஸ் சார்வு செய்யப்பட்டதில் சமூகம் நீதிமன்றத்தில் அழைததும் வருகையில்லா தரப்பினர் என்று Exparte செய்யப்பட்டதில் 3ம் எதிர்மனுதாரர் மட்டும் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்கு எதிராக எதிர்வாதம் செய்ததாகவும், கடந்த 03.07.2025ம் தேதி மேற்படி மனுக்கள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டு அசல் வழக்கும் மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு சமூகம் நீதிமன்றத்தில் அழைப்பாணை சென்ற போது தான் மேற்படி 1ம் எதிர்மனுதாரர் ஆண்டிஅம்பலம் என்பவரும் கடந்த 06.11.2020ம் தேதியன்று இயற்கை எய்திவிட்டார் என்ற விபரம் தெரிய வந்ததாகவும், ஆண்டி அம்பலத்தின் மகள் இந்திரா என்பவர் அசல் வழக்கில் 2ம் பிரவிாதியாக இருந்து வருவதாகவும், ஆண்டிஅம்பலத்தின் இதர வாரிசுகளான Proposed 4 முதல் 7 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே இறந்துபோன ஆண்டிஅம்பலத்தின் சட்டப்படியான வாரிசுகளான Proposed 4 முதல் 7 எதிர்மனுதாரர்களை தாவா வழக்கில் 4 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்துகொள்ள மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட 2033 நாட்கள் காலதாமதத்தை

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:07:27 +0530

மன்னிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மாறாக, எதிர்மனுதாரர்/3ம் பிரவிதாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரரின் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது ஒன்றாகும் என்றும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்ய மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மனுதாரர்கள்/வாதிகளை சாரும் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டு பாரா2ல் குறீப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும், மேலும் இடைநிலை மனு அனுமதிக்கப்பட்டு அதன் பின்பு அசல் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி ஆண்டிஅம்பலம் என்பவருக்கு அழைப்பாணை அனுப்பும் போது தான் ஆண்டிஅம்பலம் இறந்த விபரம் தெரியும் என்றும், மனுவில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி 06.11.2020ம் தேதியன்று இறந்துபோன விபரம் தெரியாது என்று குறிப்பிட்ட சங்கதிகள் யாவும் அப்பட்டமான பொய்யாகும் என்றும், வழக்கிற்காக இப்போது தான் தெரியும் என்று கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அல்ல என்றும், மனுதாரர்கள்/வாதிகள் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் உறவினர்கள் என்றும், இருவரும் ஒரே கிராமத்தில் ஒன்றாக வசித்து வருகிறார்கள் என்றும், ஆண்டிஅம்பலம் கடந்த 06.11.2020ம் தேதியன்று இறந்த விபரம் மனுதாரர்கள்/வாதிகளுக்கு உடனடியாக தெரியும் என்றும், வேண்டுமென்றே மனுவில் மறைத்துள்ளார் என்றும் மேலும் மனுதாரர்கள் வாதிகள், 2ம் எதிர்மனுதாரர் இந்திராவும் கூட்டு சேர்ந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இறந்துபோன விபரம் உடனே தெரிந்திருந்தும் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு சுமார் 5 1/2 ஆண்டுகள் கழித்து 2033 நாட்கள் கழிதது காலதாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், 2033 நாட்கள் காலதாமதமானது மனுதாரர்கள்/வாதிகளால் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டதாகும் என்றும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும மனவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

8) மனு அபிடவிட்டை பரிசீலிக்கையில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியும் கடந்த 06.11.2020ம் தேதியே காலமாகியுள்ளார். இவ்வழக்கும் ஏற்கனவே கடந்த

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:07:33 +0530

28.07.2022ம் தேதி Dismissed for default ஆகியுள்ளதை Restore செய்ய மனு செய்து கடந்த 16.07.2025ம் தேதியில் அனுமதிக்கப்பட்டதன் பேரில் தாவா அசல் வழக்கும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு தாவா அசல் வழக்கில் போதிய காலஅவகாசம் கொடுத்தும் 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுக்காததால் தாவா அசல் வழக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக abate ஆகியுள்ளதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தாவா அசல்வழக்கும் வாதியால் இதர பிரதிவாதிகளுக்கு எதிராக மட்டும் நடத்திட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வழக்கும் விசாரணைக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில், இந்த நிர் மனுவை 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் வாரிசுகளை 4 முதல் 7 பிரதிவாதிகளாக அசல் வழக்கில் தரப்பினராக சேர்ப்பதில் 2033 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாக சொல்லி மேற்படி காலதாமதத்தை மன்னிக்கக்கோரி இந்நிர் மனுவும் காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இந்நிர் மனுவும் காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்ட போதிலும் அசல் வழக்கை இதர பிரதிவாதிகளுக்கு எதிராக நடத்தி வருவதாகவும், தற்பொழுது இந்நிர் மனு தள்ளுபடி செய்யப்பட்டால் அதனால் பல்வேறு சட்ட நடவடிக்கைகளும் மேல்முறையீடுகளும் ஏற்படக்கூடும் என்பதாலும் அதனால் வீண் காலவிரையம் ஏற்பட கூடும் என்றும், காலவிரையத்தை தடுக்கும் பொருட்டு 1ம் எதிர்மனுதாரர்/1ம்பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினரக சேர்ப்பதில் ஏற்பட்ட 2033 காலதாமத்தை மன்னித்து உத்தரவிட வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இந்த மனுவை எதிர்த்த 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு செலவுத்தொகை செலுத்தி வைக்க உத்தரவிட வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) **முடிவாக**, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் வாரிசுகளை தாவா அசல் வழக்கில் தரப்பினராக சேர்ப்பதில் ஏற்பட்ட 2033 நாட்கள் காலதாமதத்தை மனுதாரர்கள் இம்மனுவை எதிர்த்த 3ம் எதிர்மனுதாரருக்கு ரூ.3000/- செலவுத்தொகை செலுத்தி வைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மன்னித்து உத்தரவிடப்படுகிறது. அழைக்க-17.08.2026

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:07:39 +0530

வருடம் ஆகஸ்ட் மாதம் 03—ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டடது.

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:07:44 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

| |
|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |
| எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை**
**நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**IA No.11/2026 in OS no.84/2019**
**உத்தரவு**
**நாள்:03.08.2026**